நாட்டுக் கோழிகளை தாக்கும் நோய்களும் தடுப்பு முறைகளும்

எஸ். சிவசீலன், பேராசிரியர் மற்றும் தலைவர்
கால்நடை பல்கலைக்கழகப் நோய் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி மையம், மதுரை

1. வெள்ளைக் கழிச்சல் நோய்

இராணிக்கெட் என்று சொல்லப்படும் இந்த வெள்ளைக்கழிச்சல் நோயானது வைரஸ் எனப்படும் நச்சுயிரியினால் ஏற்படுகிறது. இந்நோய் வெய்யில் அதிகமான சித்திரை மற்றும் வைகாசி மாதங்களில் அதிக அளவில் ஏற்பட்டாலும் ஆண்டு முழுவதும் இந்நோய் தாக்குகிறது. நாட்டுக்கோழிகளை கடுமையாக பாதிப்பது இந்நோய் மட்டுமே. இந்நோயின் அறிகுறிகளை பாதிக்கப்பட்ட கோழிகள் வெள்ளையாக கழிவதன் மூலமும், கொக்கு போல் குறுகிக் கொண்டு தீவனம் மற்றும் தணணீர் குடிக்காமல் இருப்பதை வைத்தும் அறிந்துகொள்ளலாம். மேலும், குஞ்சுகளின் கண்களில் நீர்க்கோர்த்தும். நரம்பு பாதிக்கப்பட்ட கோழிகள் கால்களை இழுத்துக் கொண்டும், கழுத்தைத் திருகிக் கொண்டும் தீவனம் உண்ணாமல் இருந்து இரண்டு அல்லது மூன்று நாட்களில் இறந்துவிடும். முதலில் கிராமத்தில் ஒரு வீட்டு கோழிகளுக்கு வந்த நோயானது மற்ற வீட்டுக் கோழிகளுக்கும் பரவி கிராமம் முழுவதும் உள்ள கோழிகளில் இறப்பை ஏற்படுத்தி விடும்.

இந்நோய் வந்தபின் மருத்துவம் செய்வதில் எந்த பயனுமில்லை, வருமுன் காப்போம் என்ற பழமொழிக்கேற்ப தடுப்பூசி போட்டுக்கொள்வதே ஒரெ வழி. இந்நோயை தடுக்க, குஞ்சு பொரித்த 5 முதல் 10 நாட்களுக்குள் லசோட்டா எனப்படும் தடுப்பூசி மருந்தை கண்ணில் சொட்டு மருந்தாக விட வேண்டும். அடுத்து குஞ்சுகள் 8 வார வயதை அடைந்தவுடன் ஆர்.டி.வி.கே எனப்படும் ஊசி மருந்தை இறக்கையில் போட வேண்டும். இந்த கோழி ஊசி மருந்தினை அனைத்து கால்நடை மருத்தவமனைகளிலும் இலவசமாக போட்டு இந்த நோயிலிருந்து காப்பாற்ற முடியும். இருப்பினும், பாதிக்கப்பட்ட கோழிகளை அடித்து நன்கு வேக வைத்து சமைத்து சாப்பிடுவதால் நமக்கு எந்த பாதிப்பும் ஏற்படாது மற்றும் அதுவே சரியான முறையாகும்.

2. கோழி அம்மை

மனிதர்களுக்கு வரும் அம்மை கொப்புளங்கள் போல பாதிக்கப்பட்ட கோழிகளின் தலை, கண் மற்றும் கொண்டை பகுதிகளில் கொப்புளங்கள் தோன்றும். வைரஸ் கிருமிகளால் பரவம் இந்நோய் நாட்டுக் கோழிகளைத் தாக்கும் தொற்று நோய்களில் இதுவும் முக்கியமானதாகும். பாதிக்கப்பட்ட கோழிகளில் கண் பகுதியில் கொப்புளங்கள் ஏற்படும்போது கண் பார்வை மறைந்து தீனி எடுக்க முடியாமல் போகிறது. இந்நோயானது வளர்ந்த பெட்டை மற்றும் சேவல் கோழிகளில் அதிக இறப்பை ஏற்படுத்தாவிட்டாலும் குஞ்சுகளில் இறப்பை ஏற்படுத்தும். வேப்பமர இலைகளை அரைத்து மஞ்சளுடன் கலந்து கொப்பளங்கள் மீது தடவலாம். எனினும் இந்நோயைத் தடுக்க கோழி குஞ்சுகளுக்கு 3 முதல் 6 வார வயதில் தடுப்பூசி போட வேண்டும்.

3. குடற்புழுக்களின் தாக்கம்

அஸ்காரிடியா எனப்படும் உருண்டை புழுக்களும் ரைலட்டினா எனப்படும் நாடாப்புழுக்களும் நாட்டுக்கோழிகளை அதிகம் தாக்குகின்றது. இவ்வகை புழுக்கள் கோழிகளின் குடலைத் தாக்கி கழிச்சலை உண்டாக்கும். இதனால் கோழிகள் மெலிந்து உடல் வளர்ச்சி குன்றி காணப்படும். இவ்வகை புழுக்களின் முட்டைகள் மற்றும் முதிர்ந்த பகுதிகள் பாதிக்கப்பட்ட கோழிகளிலிந்து வெளியேறி இடைநிலை இளம் புழுக்களாக மாறி மற்ற கோழிகளுக்கும் பரவுகிறது. இதனைக் கட்டுப்படுத்த புழு வகைக்கேற்ப பைப்ரசின் என்ற மருந்தை உருண்டை புழுக்களுக்கும் நிக்லோசமைடு மற்றும் அல்பெண்டசோல் மருந்துகளை கோழிகளுக்கு கொடுத்து நாடாப்புழுக்களை நீக்கலாம்.

4. பேன்தொல்லைகள்

நாட்டுக்கோழிகளை பலவகையான வெளிப்புற ஒட்டுண்ணிகள் தாக்கினாலும் பேன்களும், தெள்ளுப்பூச்சிகளும் இளம் குஞ்சுகளை அதிகம் அளவில் பாதிப்பை ஏற்படுத்தகின்றது. அதிகம் பாதிக்கப்பட்ட கோழிகளில் தோல் அரிப்பு, இறகு உதிர்தல், இரத்தசோகை மற்றும் முட்டை உற்பத்தி குறையவும் வாய்ப்புண்டு. சில சமயங்களில் வீட்டிலுள்ளவர்களுக்கு இந்த ஒட்டுண்ணிகள் தொந்தரவாக அமையும். இந்த பேன்களின் தாக்கம் அடைகோழிகளில் அதிகமாக காணப்படும். இவற்றை ஒழிக்க வசம்பு அல்லது பியூடாக்ஸ் போன்ற மருந்துகளை தெளிப்பதன் மூலம் கட்டுப்படுத்தலாம்.

5. இரத்தக் கழிச்சல் நோய்

எய்மீரியா என்னும் ஒரணு ஒட்டுண்ணிகள் குடலின் பல்வேறு பகுதிகளை தாக்குவதால் இந்நோயானது ஏற்படுகிறது. இதன் பாதிப்பு நான்கு முதல் எட்டு வார வயது குஞ்சுகளில் அதிகம் காணப்படுகிறது. பாதிக்கப்பட்ட குஞ்சுகள் இரத்தமாக கழியும். சரியான நேரத்தில் இந்நோயை கண்டறிந்து சல்பா மற்றும் ஆம்பரசால் வகை மருந்துகளை குடி தண்ணீரில் கலந்து கொடுத்து நோயைக் கட்டுப்படுத்தலாம்.

இவ்வாறாக மேற்கூடிய நோய்களைத் தடுப்பதுடன் நாட்டுக்கோழி வளர்ப்பில் ஈடுபடுவோர் கோழிக் கூண்டுகளை கிருமி நாசினி கொண்டு சுத்தம் செய்தல், கோழிகளை அடைக்கும் இடங்களில் உள்ள எச்சத்தை தினமும் நீக்குதல், நோய்வாய்ப்பட்ட கோழிகளை பிரித்து மற்ற கோழிகளுக்கு நோய் பரவுதலை தடுத்தல் மற்றும் நோயற்ற கோழிகளை சந்தையில் புதியதாக வாங்கி வருதல், பொரித்த குஞ்சுகளுக்கு முறையான தடுப்பூசி மற்றும் குடற்புழு மருந்துகள் அளித்தும் பராமரிக்க வேண்டும். இதன் மூலம் நாட்டுக்கோழிகளில் வரும் நோயைக் கட்டுப்படுத்தி இறப்பை குறைத்து அதிக இலாபம் பெறலாம்.

தடுப்பூசி அட்டவணை

தீவிர முறை நாட்டுக் கோழி வளர்ப்பில் கோழிகளின் இறப்புகளைத் தவிர்த்து அதிக லாபம் பெற கீழ் குறிப்பிட்ட காலங்களில் தடுப்பூசி அளித்து நலம் பேண வேண்டும்.

வ.எண்.	வயது	பின்பற்ற வேண்டியவை
1.	7 – வது நாள்	'லசோட்டா' – என்னும் இராணிக்கெட் நோய் தடுப்பு மருந்தினை கண் சொட்டு மருந்தாக உபயோகிக்க வேண்டும்.
2.	5 – வது வாரம்	மீண்டும் 'லசோட்டா' மருந்தினை கொடுக்க வேண்டும்.
3.	6 – வது வாரம்	கோழி அம்மை – தடுப்பூசி செலுத்த வேண்டும்.
4.	8 – வது வாரம்	ஆர்.டி.வி.கே. என்னும் இராணிக்கெட் நோய் தடுப்பூசியை செலுத்த வேண்டும்.
5.	18 – வது வாரம்	இராணிக்கெட் நோயிற்கான தடுப்பூசியை மீண்டும் செலுத்த வேண்டும்.
6.	முட்டைக் கோழிகள்	1. மூன்று மாதங்களுக்கு ஒரு முறை குடி தண்ணீரில் 'லசோட்டா' மருந்தினை கலந்து வைக்க வேண்டும். லசோட்டா கொடுப்பதற்கு ஒரு வாரத்திற்கு முன் குடற்புழு நீக்கம் செய்தல் வேண்டும். 2. தீவனம் அல்லது தண்ணீரில் வைட்டமின் கலவை மருந்துடன் சிறிது சுண்ணாம்புத்தூள் கலந்து கொடுப்பதன் மூலம், முட்டைகளின் எண்ணிக்கைகளை அதிகரிப்பதுடன், தோல் முட்டை இடுவதனையும் தடுக்கலாம்.

நோய் தடுப்பு மற்றும் பராமரிப்பு

இறைச்சி கோழிகளை போன்று நாட்டு கோழிகளை அதிகமான நோய்கள் தாக்குவதில்லை. இருந்தாலும் வெள்ளைகழிச்சல், கோழி அம்மை, கோலி செப்டிசிமியா, இரத்தக் கழிச்சல போன்ற பல்வேறு நோய்கள் அவ்வப்போது கோழிகளை தாக்க வாய்ப்புள்ளது. ஆகையால் இந்நோய்களை முறையாக கண்டறிந்து தகுந்த முறையில் தடுப்பு மருந்துகளையும் சிகிச்சைகளையும் அளித்திட வேண்டும். நோய்களின் பாதிப்பு அதிகமாக இருந்தால், அருகிலுள்ள எமது பல்கலைகழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையங்களையோ அல்லது கால்நடை மருத்துவர்களையோ அணுகி தகுந்த சிகிச்சை முறைகளை பெற்று கொள்ள வேண்டும்.

தடுப்பு மருந்து கொடுக்கும் முறை

அனைத்து தடுப்பு மருந்துகளையும் குளிர்சாதன பெட்டியில் வைத்து வெப்பநிலை மாறாமல் கோழிகளுக்கு கொடுத்திட வேண்டும். இல்லையெனில் இந்த தடுப்பு மருந்து வேலை செய்யாது. அனைத்துக் கோழிகளும் ஒரே நாளில் தடுப்பூசி போடுவது நல்லது. நோய் தாக்கம் காணப்பட்டால் தடுப்பூசி போடுவதை தள்ளி வைக்க வேண்டும். தடுப்பூசி மருந்துகளைக் கோழிகளுக்குக் கொடுத்தபின் எல்லா மருந்து குப்பிகளையும் கண்டிப்பாக அழித்து விட வேண்டும். மீதமுள்ள கலக்கிய தடுப்பு மருத்துகளை மீண்டும் பயன்படுத்தக் கூடாது.

தடுப்பு மருந்து மற்றும் அவற்றை கலக்க பயன்படும் கலப்பான் இரண்டையும் கலந்து பிறகு அம்மருந்து 30 முதல் 60 நிமிடங்களுக்குள் கோழிகளுக்கு சென்றடைய வேண்டும் ஆகையால் கலந்த மருந்தை உடனடியாக கோழிகளுக்கு கொடுத்திட வேண்டும்.

தண்ணீர் மூலம் கொடுக்கும் போது தண்ணீரில் ஐஸ் கட்டிகள் கலந்து கொடுத்தால் வெப்பநிலையை பராமரிக்க முடியும். இவ்வாறு கலக்கப்படும் ஐஸ் கட்டிகள் கிருமி நாசினி கலந்த தண்ணீரில் தயாரிக்கப்பட்டிருக்க கூடாது. மேலும் தடுப்பு மருந்தை வெறுமனே தண்ணீரில் கலக்கமால் அரைகிலோ பால் பவுடருக்கு 10 லிட்டர் தண்ணீர் என்ற விகிதத்தில் கலந்து கொடுத்தால் தான் மருந்து வீரியத்துடன் கோழிகளுக்கு சென்றடையும். தற்போது பால் பவுடருக்கு பதிலாக சந்தைகளில் சில மருந்துகளும் உள்ளன. தண்ணீர் மூலமாக தடுப்பு மருந்து கொடுக்கும் போது தண்ணீரில் கிருமி நாசினி கலந்திருக்க கூடாது.

தண்ணீரின் மூலம் கொடுக்கும்போது மருந்து அனைத்து கோழிகளுக்கும் கிடைக்குமாறும் வெப்பநிலை மாறும்முன் அனைத்து கோழிகளும் குடிக்குமாறும் பார்த்து கொள்ள வேண்டும். இதற்காக தடுப்பு மருந்து கொடுக்கும் முன் 2 முதல் 3 மணி நேரம் கோழிகளுக்கு தண்ணீர் கொடுக்காமல் தாகமாக வைத்திருந்து கொடுத்தால் அனைத்து கோழிகளும் தடுப்பு மருந்து கலந்த தண்ணீரை எடுத்து கொள்ளும். காலை அல்லது மாலை வேளைகளில் தான் தடுப்பு மருந்து கொடுக்க வேண்டும்.

தண்ணீரில் தடுப்பு மருந்து கொடுக்கும்போது ஆட்டோமெடிக், தண்ணீர் தொட்டியை நம்பக் கூடாது, ஆகையால் தடுப்பு மருந்து ஒரு வாளியில் தேவையான அளவு தண்ணீர், ஐஸ்கட்டி பால்பவுடர் போன்றவற்றுடன் கலந்து சுத்தம் செய்து தயார் நிலையில் உள்ள தண்ணீர் தொட்டியில் ஊற்றி விட வேண்டும். தண்ணீரில் தடுப்பு மருந்து கொடுக்கும்போது தண்ணீர் கிருமி நாசினி கலந்திருக்கக் கூடாது.